**பீட்ரூட் வெற்றிக்கு விவசாய ஜோதிடம்**



“கட்டுபடியாகும் விலை விவசாயிகளுக்கும், கட்டுப்படுத்தப்பட்ட விலை நுகர்வோர்க்கும் கிடைக்க வழி இருக்கிறது. அதற்கு விவசாய ஜோதிடம் பற்றிய அறிவு வேண்டும்” என்கிறார் உடுமலைப்பேட்டையில் இருந்து கூப்பிடு தொலைவில் உள்ள கணபதிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த பீட்ரூட் விவசாயி வேலாயுதம். நாம் பயிரிடும் பயிர் எங்கெல்லாம் விளைகிறது, எவ்வளவு பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது எப்பொழுது அறுவடைக்கு வரும், சந்தை வாய்ப்பு பிரகாசமாக உள்ளதா மகசூல் இந்த ஆண்டு எப்படி இருக்கும், நாம் அறுவடை செய்யப்போகும் சமயத்தில் அந்தக் காய் வேறு மாநிலத்தல் இருந்து இங்கே அதிகமாக வருவதற்கு வாய்ப்பு உள்ளதா? இப்படி பல்வேறு கேள்விகளுக்கும் பதிலைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு விவசாயியும் இதையெல்லாம் அறிந்தும், தெரிந்தும் கொண்டால் நல்ல மகசூல் மட்டுமல்ல, நல்ல விலையும் கிடைக்கப்பெறலாம். இதைதான் “விவசாய ஜோதிடம்” என்கிறார் இவர்.இவர் 10 ஆண்டுகளாக காய்கறி பயிர்களின் சாகுபடி, மகசூல், விளை பட்டியல், விளை வீழ்ச்சி ஆகியவைகளை பராமரித்து வருகிறார். வேலாயுதம் நண்பர்களுடன் சேர்ந்து கணிப்பொறி வசதியுடன் கூடிய வேளாண் தகவல் மற்றும் ஆலோசனை மையம் ஒன்றினை உடுமலைப்பேட்டையில் தொடங்கவிருக்கிறார். இதன் மூலம் அனைத்துவித விவரங்களையும் விவசாயிகள் தெரிந்து கொள்ளமுடியும் என்பது அவரின் நம்பிக்கை. பீட்ரூட் விவசாயம் பற்றி தொடர்ந்தவர்,”விதைத்த 60 முதல் 70 நாட்களுக்குள் பலன் தரும் குறுகிய காலப் பயிர்தான் பீட்ரூட் அதிக மழை, அதிக வெயில் இரண்டும் பீட்ரூட் சாகுபடிக்கு கரிவராது.

மிதமான தட்பவெப்பமுடைய ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு வந்த பீட்ரூட் பல வருடங்களாக ஒடுமலை பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் அளவில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. காரணம் ஆண்டின் பெரும்பாலான மாதங்கள் இங்கும் சீரான சீதோஷ்ண நிலை இருப்பதுதான்.மதுரை, தேனி, ஒட்டன்சத்திரம், திருப்பூர், மற்றும் கேரளா மாநிலம் உள்ளிட்ட இடங்களில் இதன் தேவை அதிகம். இரண்டு, மூன்று விவசாயிகள் ஒன்று சேர்த்து வாகனம் மூலம் ஏற்றிச்சென்று விற்பனை செய்தால் கூடுதல் லாபம் பார்க்கலாம். சொந்த வேனில் ஏற்றி மதுரை, தேனி, ஒட்டன்சத்திரம்,

உன்று சந்தைகளுக்கு சென்று நேரிடையாக விற்பனை செய்து வருகிறேன். போக்குவரத்து செலவு போகவும் கணசமான லாபம் கிடைக்கிறது என்று கூறினார்.

விவசாய விளை பொருள் கொள்முதல் மேலும் இவர் கார்ப்பரேஷன் ஒன்றினை அரசாங்கம் நிறுவினால், விளைபொருட்களுக்கு கட்டுப்படியான விலை கட்டுப்படுத்தப்பட்ட விலைவாசி என்கிற இரண்டு முக்கியமான லட்சியத்தை அடையமுடியும் என்று அழுத்தமாகச் சொன்னார்.ஏக்கருக்கு நிகரலாபம் 17,650 ரூபாய் கிடைக்கும், என்று கூறுகிறார் இவர். ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் உடுமலை பீட்ரூட் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

**தொடர்புக்கு:**

வேலாயுதம்,

கணபதி பாளையம் கிராமம்,

உடுமலைப்பேட்டை.

**அலைபேசி**: 94437-48966